DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.19

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மகாலிங்கம் | Caste: | |
| Father's Name: | எஸ். கதிரேசன் | Calling: | தலைமை காவலர் |
| Village: | நகரத்தார்குறிச்சி | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 47 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.08.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது கமுதி தாலுகா அபிராமம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2021 முதல் 2024 வரை கமுதி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். கமுதி காவல்நிலையத்தில் பணிபுரியும்போது நான் கமுதி காவல்நிலைய போலிஸ் Data Entry Operator ஆக பணி செய்தேன் . கமுதி காவல்நிலைய கு.எண். 37/2024 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC @ 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC r/w 3(1)(r), 3(1)(s) , 3(1)(w)(i), 3(2)(va) of SC/ST (POA) Act வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான கமுதி வட்ட காவல் ஆய்வாளர் மற்றும் கமுதி உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் மேற்படி வழக்கு சம்பந்தமாக சாட்சிகள் கூறிய வாக்குமூலங்களை சொல்ல சொல்ல நான் கணினியில் தட்டச்சு செய்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

குறுக்கு விசாரணை இல்லையென வழக்கறிஞர் தெரிவித்ததன்பேரில் குறுக்கு விசாரணை இல்லை.

3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

இந்த வழக்கில் வாக்குமூலம் பதிவு செய்ய எனக்கு தனியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா அல்லது என்னுடைய அன்றாட பணியா என்றால் அன்றாட பணி. வாக்குமூலம் பதிவு செய்யும்போது யார் யார் கூட இருந்தார்கள் என்றால் நான், புலன் விசாரணை அதிகாரியான காவல்துணைக் கண்காணிப்பாளர் மற்றும் சாட்சிகள் மட்டும் இருந்தோம். புலன் விசாரணை அதிகாரி எங்கு சாட்சி விசாரித்தாரோ அங்கு வெளியில் வைத்து விசாரித்தால் மடிக்கணினியிலும் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்த சாட்சிகளை காவல்நிலையத்தில் உள்ள கணினியிலும் டைப் செய்வோம். நான் டைப் செய்த மடிக்கணினி யாருடையது என்றால் என்னுடையது. நாங்கள் வேறு எங்கும் வைத்து மடிக்கணினி மூலம் வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றும காவல்நிலையத்தில் உள்ள கணினியில் பின்னிட்டு தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 19/2024**

அ.சா.20

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | குருநாதன் | Caste: | |
| Father's Name: | அழகுமுத்து | Calling: | ஆய்வாளர், டி.கல்லுப்பட்டி காவல்நிலையம், மதுரை மாவட்டம் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 53 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 01.08.2025

( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர்.)

**முதன்மை விசாரணை**

நான் தற்போது மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 31.01.2024ம் தேதி கமுதி காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் உதவி ஆய்வாளர் பேபி இசக்கி பிரகதாம்பாள் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த 37/2024 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC வழக்கு கோப்பை அன்றைய தினம் இரவு நேரம் என்பதால் 01.02.2024ம் தேதி காலை 6.30 மணிக்கு சம்பவ இடமான இடைச்சியூரணி விலக்கு தாண்டி உடைமரம் வெள்ளைச்சாமி கோவிலுக்கு இடது பக்கம் உள்ள கருவக்காட்டில் உள்ள சம்பவ இடத்தை சாட்சிகள் வீரப்பன், சுப்பையா ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த வரைபடம் **அ.சா.ஆ. 18**. அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு சம்பவ இடத்தில்

காணப்பட்ட கிழிந்த நிலையில் உள்ள மஞ்சள் கலர் மணிபர்ஸ் ஒன்று மற்றும் ஆதார் எண் 907803126367 தாமரைச் செல்வி த/பெ. போஸ் நம்பர் 890, வேலாயுதபுரம், நரிக்குடி அஞ்சல், விருதுநகர், தமிழ்நாடு 620 129. செல் நம்பர். 9626230251 என்று எழுதப்பட்ட ஆதார் அட்டையின் புகைப்பட நகல் ஒன்றை அதே சாட்சிகளின் முன்னிலையில் 7.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். பின்னர் சாட்சிகள் தாமரைச் செல்வி, முருகவேல், வீரப்பன், சுப்பையா ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 03.02.2024ம் தேதி காலை 8.00 மணிக்கு கமுதி–அருப்புக்கோட்டை மெயின் ரோட்டில் அரைக்காசு அம்மன் கோவில் அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது காவல்துறையினரை கண்டவுடன் TN 61 V 9369 என்ற YAMAHA R15 என்ற கருப்பு கலர் பைக்கில் வந்தவர்கள் தப்பி ஓட முயன்றபோது அவர்களை பிடித்து விசாரித்தபோது ஒருவர் அஜித் என்ற விக்னேஷ்வரன் என்றும், பின்னால் அமர்ந்து வந்தவர் பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமார் என்றும் கூறினார்கள். அவர்களை முறையாக சோதனை செய்தபோது அவர்களிடம் தடை செய்யப்பட்ட கஞ்சா அஜித் என்ற விக்னேஷ்வரனிடம் 2 கி எடையிலும், பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமாரிடம் 1 ¼ கி எடையிலும் இருந்தது. அவர்களை காலை 8.30 மணிக்கு கைது செய்து தாசில்தாரிடம் போன்மூலம் கூறி வரவழைக்கப்பட்ட வருவாய் துறை சாட்சிகளான பாக்குவெட்டி கிராம குரூப் மற்றும் பொறுப்பு கமுதி கிராம குரூப் நிர்வாக அலுவலர் சிவலிங்கம் மற்றும் பாக்குவெட்டி கிராம உதவியாளர் உக்கிரபாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரனை விசாரணை

செய்தபோது தானாக அவர் முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் வைத்திருக்கும் கஞ்சா உட்பட பல்வேறு வழக்குகள் பற்றி கூறிவிட்டு 29.01.2024ம் தேதி சுமார் 11.00 மணிக்கு அருப்புக்கோட்டை ரோடு இடைச்சியூரணி விலக்கு ரோடு அருகே உள்ள உடைமரம் வெள்ளைச்சாமி கோவிலுக்கு எதிரே உள்ள கருவக்காட்டில் வைத்து 37/2024 வழக்கின் சம்பவம் பற்றி ஒத்துக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் அந்த சம்பவத்தின்போது இவ்வழக்கின் வாதி தாமரை செல்வியிடம் பறித்த ரூபாய் 550/- மற்றும் முருகவேலிடம் பறித்த ரூபாய் 3000/- பணத்தில் செலவு செய்தது போக மீதமுள்ள ரூபாய் 500/- ஐ தனது பாக்கெட்டில் வைத்திருப்பதாகவும், அதை என்னிடம் ஆஜர்படுத்துவதாகவும், மேலும் தன்னை அழைதது கொண்டு சென்றால் நீராவி கரிசல்குளம் சுடுகாட்டில் மறைத்து வைத்திருக்கும் இவ்வழக்கு சம்வத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 03.02.2024ம் தேதி 11.00 மணிக்கு அதே இடத்தில் எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரன் எடுத்து ஆஜர் செய்த NOTHING கருப்பு கலர் ஸ்மார்ட் போன் ஒன்று. ரூபாய் 500/- நோட்டு ஒன்று. அதே சாட்சிகளின் முன்னிலையில் 11.00 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் 500 ரூபாய் நோட்டுதான் நான் 1ம் எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரனிடமிருந்து கைப்பற்றிய நோட்டு. அது **அ.சா.பொ.5.** பின்னர் மற்றொரு எதிரியான பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமார் அதே சாட்சிகள் முன்னிலையில் 11.45 மணிக்கு விசாரணை செய்தபோது தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த சம்பவத்திற்கு பயன்டுத்திய கத்தியை நீராவி கரிசல்குளம் சுடுகாடு அருகே மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து கொண்டு சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாகவும் சொன்னதன் அடிப்படையில் 03.02.2024ம் தேதி 13.30 மணிக்கு நீராவி கரிசல்குளம் சுடுகாட்டில் உள்ள கருவக்காட்டில் இருந்து மேற்படி எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 34 செ.மீ நீளமுள்ள கத்தி அதில் மரக்கைப்பிடியின் நீளம் சுமார் 13.5 செ.மீ மீதமுள்ள இரும்பு பகுதியின் நீளம் 20.5 செ.மீ நீளமுள்ள கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். சம்பவ இடத்தில் 01.02.2024ம் தேதி காலை 7.00 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.19**. 1,2 எதிரிகள் 03.02.2024ம் தேதி காலை 11.00 மணிக்கு கமுதி – அருப்புக்கோட்டை மெயின் ரோட்டில் அரைக்காசு அம்மன் கோவில் அருகில் வைத்து 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி "என்னை கூட்டிச் சென்றால் நீராவி கரிசல்குளம் அருகே சுடுகாட்டில் மறைத்து வைத்துள்ள இடைச்சியூரணி பஸ்ஸ்டாப் பக்கம் வெள்ளைச்சாமி கோவில் அருகே ஒரு பொம்பளயை கற்பழிக்க மிரட்ட பயன்படுத்திய கத்தி" **அ.சா.ஆ.20**. 2ம் எதிரி பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமார் அதே இடத்தில் வைத்து கொடுத்த ஒப்புதல் வாக்மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி " என்னை கூட்டிச் சென்றால் நீராவி கரிசல்குளம் சுடுகாட்டில் மறைத்து வைத்துள்ள இடைச்சியூரணி பஸ்ஸ்டாப் பக்கம் வெள்ளைச்சாமி கோவில் அருகே ஒரு பொம்பளயை கற்பழிக்க மிரட்ட பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்கிறேன்". **அ.சா.ஆ.21**. 03.02.2024ம் தேதி மதியம் 1.15 மணியளவில்

நீராவி கரிசல் குளம் சுடுகாட்டில் உள்ள கருவக்காட்டில் இருந்து 1ம் எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரன் எடுத்து ஆஜர் செய்தபோது தயார் செய்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.22**. அதே தினம் மதியம் 1.30 மணியளவில் அதே இடத்தில் 2ம் எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தியை கைப்பற்றும்போது தயார் செய்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.23**. 03.02.2024ம் தேதி மாலை 4.30 மணியளவில் 3ம் எதிரி சூர்யா என்பவரை பசும்பொன்னில் உள்ள வெள்ளைச்சாமி தேவர் நினைவு மண்டபம் அருகில் உள்ள ஊரணி அருகில் வைத்து கைது செய்து அதே சாட்சிகளான கிராம நிர்வாக அலுவலர் சிவலிங்கம் மற்றும் கிராம உதவியாளர் உக்கிரபாண்டி ஆகியோர் முன்னிலையில் விசாரிக்குமபோது மேற்படி எதிரி தானாக முன்வந்து மேற்படி சம்பவம் குறித்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை பசும்பொன்னில் உள்ள தனது வீட்டிற்கு பின்புறம் மறைத்து வைத்திருப்கதாவும் தன்னை அழைத்து கொண்டு போனால் ஆஜர் செய்வதாகவும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 5.45 மணிக்கு எதிரி சூர்யாவின் வீட்டிற்கு பின்புறம் வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 33.5 செ.மீ நீளமுள்ள மரக்கைப்பிடியுடன் கூடிய கத்தி (மரக்கைப்பிடியின் நீளம் 11.5 செ.மீ, மீதமுள்ள இரும்புபகுதியின் நீளம் 22 செ.மீ). கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். 3ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் சாட்சிய சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பகுதி "என்னை எனது வீட்டிற்கு பின்னால் அழைத்து சென்றால் நான் 29.01.2024ம் தேதி சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்கிறேன் " **அ.சா.ஆ. 24**. அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.25**. சாட்சிகள் கிராம

நிர்வாக அலுவலர் சிவலிங்கம் , கிராம உதவியாளம் உக்கிரபாண்டி ஆகிய இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கு படிவம் 91 தயார் செய்து எதிரிகளை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 ( 5 தாள்கள் கொண்டது) **அ.சா.ஆ.26**. பின்பு 04.02.2024 ம் தேதி எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரன் ஆஜர் செய்த NOTHING என்று எழுதப்பட்ட செல்போனில் உள்ள இவ்வழக்கு சம்பவம் குறித்து எடுக்கப்பட்ட வீடியோ மற்றும் போட்டோ பதிவுகளை கமுதியில் உள்ள ரகுமான் டிஜிட்டல் ஸ்டுடியோ உரிமையாளர் ரகுமான் என்பவர் தனது கணினிமூலம் பென்டிரைவில் பதிவேற்றம் செய்து கொடுத்த அப்துல்ரகுமான் என்பவரிடம் 65B IT Act ன் கீழ் சான்று பெற்றேன். அந்த பென்டிரைவ் **அ.சா.ஆ. 27**. 08.02.2024 ம் தேதி வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் பேபி இசக்கி பிரகதாம்பாள் என்பவரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் வழக்கின் வாதி தாமரை செல்வி மற்றும் சாட்சி முருகவேல் ஆகியோர்களை குவிமுச 164 ன் பிரகாரம் வாக்குமூலம் பதிவு செய்ய குற்றவியல் நீதித்துறை நடுவர், கமுதி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அன்றைய தினமே எதிரிகள் அஜித் என்ற விக்னேஷ்வரன், பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமார் ஆகிய இருவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை பெற்றுதர கனம் நீதித்துறை நடுவர், கமுதி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 13.02.2024 ம் தேதி வழக்கின் வாதி தாமரை செல்வி மற்றும் முருகவேல் இருவரையும் கனம் கமுதி குற்றவியல் நீதித்துறை

நடுவர் நீதிமன்றத்தில் என்னால் ஆஜர்படுத்தப்பட்டு குவிமுச 164ன் கீழ் வாக்குமூலம் பெறப்பட்டது. அன்றைய தினமே வாதி தாமரை செல்வி என்பவரிடமிருந்து மருத்துவமனை மூலமாக சேகரிக்கப்பட்ட Cervical Smear, Vaginal Smear, Swab, இரத்தம், உமிழ்நீர் ஆகியவற்றை பகுப்பாய்விற்கு அனுப்பி அறிக்கை பெற்றுதர கனம் நீதித்துறை நடுவர், கமுதி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அன்றைய தினமே சாட்சிகள் தாமரை செல்வி, முருகவேல் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 14.02.2024ம் தேதி சாட்சிகள் கரண், முனீஸ்வரி, போஸ், சுப்பு , காவியா, கோட்டைச்சாமி, முனியசாமி ஆகிய சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 15.02.2024ம் தேதி சாட்சிகள் சந்திரசேகர், குப்பை சாகிபு, ரகமத்துல்லா ஆகியோர்களை விசாரித்து வாக்மூலங்களை பதிவு செய்தேன். 16.02.2024ம் தேதி அஜித் என்ற விக்னேஷ்வரன், பாலமுருகன் என்ற பாலகுமார் என்ற மண்டைகுமார் ஆகியோர்களை நீதிமன்ற உத்தரவு பிரகாரம் இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பரிசோதனைக்கு உட்படுத்தி மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். 28.02.2024ம் தேதி மருத்துவமனையில் வாதி தாமரை செல்வியிடமிருந்து சேகரம் செய்து வைத்திருந்த தடயங்களை நீதிமன்ற உத்தரவு பிரகாரம் காவலர் 480 முத்துமாரி என்பவர் மூலம் தடய அறிவியல் ஆய்வகத்தில ஒப்படைக்கப்பட்டது. 23.03.2024ம் தேதி வாதி தாமரை செல்வி, சாட்சி முருகவேல் மற்றும் மூன்று எதிரிகளுக்கும் சாதி சான்றிதழ் கோரி வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். 29.03.2024ம் தேதி வாதி தாமரை செல்வி மற்றும் முருகவேல் மற்றும்

எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் பெறப்பட்டு பார்வையிட்டதில் இருந்தும் இந்த வழக்கின் சாட்சிகள் தாமரைச் செல்வி, முருகவேல் ஆகியோர்களின் விசாரணையில் இருந்தும் இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC லிருந்து 341, 294(b), 323, 392, 376D, 506(ii) IPC r/w. 3(1)(r), 3(1)(s), 3(1)(w)(i), 3(2)(va) of SC/ST(POA) Act ன் பிரகாரம் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து மேற்படி வழக்கு கனம் பட்டியலிட்ட ஜாதியினர் மற்றும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு நீதிமன்றம்,இராமநாதபுரம் விசாரிக்கக்கூடிய வழக்கு என்பதால் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க கனம் நீதித்துறை நடுவர், கமுதி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். நான் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையுடன் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கக்கோரி கனம் நீதித்துறை நடுவர், கமுதி நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை **அ.சா.ஆ.28**. 1ம் எதிரி அஜித் என்ற விக்னேஷ்வரனிடமிருந்து ரூபாய் 500 தாள் ஒன்றையும் NOTHING கருப்பு கலர் ஸ்மார்ட் போன் ஒன்றையும் கைப்பற்றும்போது தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.29.** 29.03.2024ம் தேதி இராமநாதபுரம் காவல்கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவு C.No. 08/SJ&HR/RMD/2024, Dated: 29.03.2024ன் பிரகாரம் வழக்கு கோப்பை கமுதி உட்கோட்ட காவல்துணைக் கண்காளிப்பாளர் வசம் ஒப்படைத்தேன். இதுசம்பந்தமாக காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)